



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காலம் முதல் இன்று வரையிலும் கழகத்துக்கும் நம் கழகத் தலைவருக்கும் உறுதுணையாக இருந்து வரும் கழக மூத்த முன்னோடிகள் 1500 பேருக்கு, கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நேற்று முன்தினம் தலா ரூ.10,000 பொற்கிழிகளை வழங்கி உரையாற்றினார். உடன் மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மு.மணிமாறன், அமைச்சர்கள் பி.மூர்த்தி, கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி ஆகியோர்





தி.மு.கழகத்தின் மூத்த முன்னோடி முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறனின் தந்தையார், மறைந்த சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று முன்தினம், கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை தெற்கு மாவட்டம் முத்தப்பன்பட்டியில் உள்ள சேடபட்டியாரின் இல்லத்தில் அவருடைய திருவுருவப்படத்துக்கு மலர்தூவியும், நினைவிடத்தில் மலர்வளையம் வைத்தும் மரியாதை செய்தார். உடன் மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மு.மணிமாறன், அமைச்சர்கள் பி.மூர்த்தி, கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது எடுத்த படம். இதில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.



வெற்றி, தோல்வி என எதுவாக இருப்பினும் தி.மு.கழகத்தின் ஏற்றத்துக்கு உழைத்த கழக மூத்த முன்னோடிகள் 1,000 பேருக்கு, மதுரை மாநகர் மாவட்டக்கழகம் சார்பில் தலா ரூ.10,000 பொற்கிழியை கழக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, அமைச்சர்கள் பி.மூர்த்தி, கே.ஆர்.பெரியகருப்பன், பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், முன்னாள் மாவட்டச் செயலாளர் வ.வேலுச்சாமி, முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நாமக்கல் - சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம்பட்டிமேடு)

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று காணொலி வாயிலாகத் திறந்து வைக்கிறார்!

**நாமக்கல், செப். 23-**

**தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை, நாமக்கல் மாவட்டம் - கொண்டம்பட்டி மேட்டில் நிறுவப்பட்டுள்ளது.**

**இத்திருவுருவச் சிலையினை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று காலை காணொலி மூலம் திறந்து வைத்து - விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.**

இவ்விழா பற்றிய விபரம் வருமாறு:-

சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை சார்பில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் 'அறிவகம்' எனும் நூலகம் ஆகியன நாமக்கல் - சேந்தமங்கலம் சாலையில் (கொண்டம்பட்டிமேடு) - சிலம்பொலியார் நகரில் நிறுவப்பட்டுள்ளன.

இவற்றின் திறப்புவிழா - இன்று (23.9.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு - பி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் டாக்டர் பழனி. ஜி.பெரியசாமி தலைமை வகிக்கிறார்.

கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி., பி.இராமலிங்கம் எம்.எல்.ஏ., கு.பொன்னுசாமி எம்.எல்.ஏ., ச.சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சாந்தலிங்க மருதாசல அடிகளார் ஆகியோர் - அன்பு அருளுரை வழங்குகின்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி வாயிலாக, தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் அறிவகத்தைத் திறந்து வைத்து, விழா மலர் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி, ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் - சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் 'இளங்கோ விருது' மற்றும் 1 லட்சம் ரூபாய் பொற்கிழி - புலவர் தமிழமுதனுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன், முனைவர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் நிர்வாகியும் - சிலம்பொலியாரின் புதல்வருமான செ.கொங்குவேள் நன்றி கூறுகிறார்.

கவிஞர் தமிழன் ராகுல் காந்தி - நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்குகிறார்.

